RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s219

# தமிழிசை வளர்த்த தேவாரமூவர்

## ப. திவ்யரூபசர்மா [அ, *]

[அ] தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம்-608002.

# The Raise of Tamilisai by Thevara Moover

## P. Divyaroobasharma [a, *]

[a] Department of Tamil, Annamalai University, Chidambaram-608002, Tamil Nadu, India.

* Corresponding Author: rubadevi.a@gmail.com

Received: 04-01-2021
Revised: 11-04-2021
Accepted: 16-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

As far as Tamil literatures are concerned, most of the books belonging to the Saiva Vaishnavism. It is customary to say that Saiva Vaishnava religion such as Thevaram, Thiruvasagam and Four Thousand DivyaPrabandham. The thevara songs that arose during the Saivism renaissance are seen as a repository of music. During the period when Saivism was caught up in the closeness of other religions, Thirugnanasambandar and Upper Sundarar appeared and passionately dipped the classic Tamil songs into sweet hymns to make the world aware of the true glories of Saivism. They realized that music was popular and composed the songs accordingly. Religious ideas have made music flow into hymns and touch the minds of the people. If you sing them with joy, the mind will be conscious of God. This is the purpose of the Saivism Kuravas. Music helped them to fulfill this purpose.The Tamillsai of the time is best known through the songs of Thevara. The Period of Thevara can be considered as the period of musical upheaval of Tamils. In the natural senses of pleasure, the sense of music is intimately linked to the highest.

**Keywords:** Saivism Kuravas, Tamillsai, Saivism, Thevaram

## முன்னுரை

உலகத்தில் எத்தனையோ புதுமைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் நம் பகுத்தறிவுக்கு புலப்பாடாமல் எத்தனையோ சக்திகள் புதிராக என்னும் புதுமையாக விளங்கி வருகின்றன. ஊலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாக கடவுள் பக்தி உண்டு. மனிதனுக்குரிய உணர்ச்சிக்கூறுகள் பலவற்றுள் கடவுள் பற்றிய உணர்ச்சியும் இயல்பாகவே அமைந்துள்ளது. பாலினுள் கலந்த நெய்போல மனிதனிடத்திலும் கடவுள்பற்றிய உணர்வு நீக்கமற நிறைந்திருக்கிறது.

சிவ சம்பந்தமுடையது சைவம், சிவனை இடையாறாது எண்ணி உள்ளம் உருகும் செந்நெறியே சைவமாகும். சிவம் என்ற சொல்லுக்கு நன்மை, வீடுபேறு, மங்கலம், செம்மை எனப்பல பொருள்கள் உண்டு, சிவம் என்னும் நாமம் தனக்கே உரிய செம்மேனி கொண்டவனின் சீர்புகழைச் செப்புவதே சைவ சமயம்.

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதில்சார்
சிவமாம் தெய்வத்தின் மேற்தெய்வம் இல்லெனும்" (சைவஎல்லப்பநாவலர்)

என்று சைவத்தைச்சான்றோர் புகழ்ந்துள்ளனர்.

சைவசமயத்தில் வாழையடி வாழையென ஞானியர் பலர் வந்திருக்கின்றனர். அதில் தமிழின் இசை வளத்திற்குத் திருமுறைப்பாடல்கள் சான்றாக விளங்குகின்றன.

சம்பந்தர்பாடிய பண்கள், அப்பர்பாடிய பண்கள், சுந்தரர் பாடிய பண்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழிசையை சைவம் எவ்வாறு வளர்த்துள்ளது என்பதை எண்ணுவதே இனிமையானதாகும். தமிழை இசைத்தமிழாக்கிய பெருமை சைவத்திற்கே உண்டு. பன்னிரு திருமுறைகளும் பதின்னான்கு சாத்திரங்களும், பல மடங்களும் சைவத்தை செழிக்கவைத்ததோடு தமிழையும் தமிழிசையையும் தழைக்கச்செய்தன. சைவசமயத்தைச் சார்ந்த ஞானப் பெருமக்கள் மிகச்சிறந்த தத்துவஞானிகளாகத் திகழ்ந்து மனிதவாழ்வியலை மிகச்சிறப்பாகத் தமது அருட் பாக்களில் நூல்களில் எடுத்துக்கூறியுள்ளனர்.

## ஆய்வு நோக்கம்

சமயம் என்பது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ வழிகாட்டும் தன்மையுடையதாகும்.

ஒரு மொழியை வளப்படுத்தும் திறமை ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு. மொழிவளம் பெறும்போதும் சிந்தனையும் அறிவும் வளம்பெறும் பின்னர் அது வலுப்படும் பல்வேறு மொழிகள் இருப்பினும் தமிழ்மொழி எந்தவகையில் சைவத்திற்கும் தமிழிசைக்கும் தொண்டாற்றியுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும் இவ்ஆய்வானது வரலாற்று மற்றும் விவரண அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## திறவுச்சொற்கள்

இசை, இன்னிசை, பாடல், தமிழ்

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யபிரபந்தம் ஆகிய சைவ வைணவ சமயங்களைச் சேர்ந்த நூல்களைக் கூறுவது வழக்கம்.

சைவ சமய மறுமலர்ச்சி காலத்தில் எழுந்த தேவாரப்பாடல்கள் இசைக்களஞ்சியமாகக் காணப்படுகின்றன. வேற்று சமயங்களின் நெருக்கத்தில் சைவம் சிக்கியிருந்த காலகட்டத்தில் திருஞானசம்பந்தர், அப்பர் சுந்தரர் ஆகிய மூவரும் தோன்றிச் சைவத்தின் உண்மையான பெருமைகளை உலகத்துக்கு உணர்த்திக்காட்ட உன்னதமான தமிழ்ப்பாடல்களை உணர்ச்சி பொங்க இசையில் தோய்த்தெடுத்து இனிமையான பாசுரங்களாக மாற்றியுள்ளனர். இசை மக்களைக் கவரும் தன்மையுடையது என்பதை நன்கு உணர்ந்து பாடல்களை அதற்கு தக்கவாறு அமைத்துப்பாடியுள்ளனர். சமயக்கருத்துக்கள் இசையை பாசுரங்களாக பாய்ந்து மக்களின் மனதைத் தொட்டு வளப்படுத்தியுள்ளன. அவற்றைக் களிப்புடன் பாடினால் மனம் இறை உணர்வுக்கு ஆட்படும். சைவம் தழைக்கும் இதுதான் சைவ சமயக் குரவர்களின் நோக்கம். இந்த நோக்கம் நிறைவேற இசை நல்ல துணையாக அவர்களுக்கு அமைந்தது.

தேவாரப்பாடல்கள் மூலம் அக்கால தமிழர் இசைபற்றி மிகச்சிறப்பாக அறியமுடிகிறது. தேவார காலத்தைத் தமிழிரின் இசை எழுச்சி காலமாகக் கருதலாம். மனிதன் இயற்கையான இன்ப உணர்வுகளிலேயே இசை உணர்வு உன்னதத்துடன் நெருக்கமான பிணைப்புடன் காணப்படுகிறது.

## சம்பந்தர் பாடல்கள்

தேவாரப் பாடலில் உள்ள இசையானது சிறப்பான பக்திப் பாடலிசையாக விளங்குகிறது. உள்ளத்தில் பக்தி உணர்வு எழுந்து பாடலிசையாக பரந்து பாயும் பாடல்கள் மூவர் தேவாரத்திலும் இசை மலிந்துள்ளது. திருஞான சம்பந்தரின் பாடல்களில் பல “இசை” யென்ற சொல்லைச் சுமந்து காணப்படுகின்றன. “இசைகள் பாடிட” (274:7) என்று அவர் கூறுவதைக் கொண்டு இசைக்கும்

பாடலுக்கும் வேறுபாடு இன்றி அவர் உணர்ந்துள்ள பாங்கைக் காணலாம். “இசையின் கிளவி தேர்வார்” (170:4) என்று பாடுவோரையும் “இசையோடு பாடல்” (78:11) என்று சம்பந்தர் கூறுவதிலிருந்து அவருடைய இசை பற்றிய மதிப்பு நன்கு விளங்கும். “இன்னிசைபாடல் (29011) “இன்னிசையவர்” (343:11) “இன்னிசையாற் பாடவல்லார்” (132:11) என்று பலவிதமாக சம்பந்தர் கூறுவதில் இசை இணிமையுடையதாகஇருத்தல் வேண்டும் என்பதைக் குறிப்பாக உணரலாம். மேலும் சில இடங்களில் “தமிழ் இன்னிசை” (274:11) என்றும் “தமிழ் கிளவி இன்னிசை” (334:11) என்றும் அவர் குறிப்பிடுவதில் தமிழிசை பற்றிய உணர்வைக் காட்டுகிறார்.

தொண்டர்கள் இசைபாடியே இறைவனை வணங்க வேண்டும் “தொண்டர் இசைபாடியும் கூடிக்கண்டு துதி செய்” (38:6) கோயிலைப் பற்றி சம்பந்தர் பெருமையுடன் பேசுகிறார். முறைமுறையாய் இசைபாடு வாரடிமுன் தொண்டர்கள்” (1) (3:9:5) நல்லருள் வாய்க்கும் பேறுடையார்கள். இசை, இனிய, இசை, தமிழிசை, இசைப்பயன் போன்று பலவற்றை பற்றிச் சம்பந்தர் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இவற்றிலிருந்து அவருடைய இசைப்பற்று, இசைப்பயிற்சி, தமிழிசைவெளிப்பாடு ஆகியன நன்கு தெளிவாகின்றன. எடுத்துக்காட்டாக: 274:7 ஸ்ரீ 274 -பதிகஎண், 7-பாடல் எண்.

## திருநாவுக்கரசர் பாடல்கள்

அப்பரும் பழந்தமிழிசை உணர்வுமிக்கவர் என்பதை அவருடைய பாடல்களில் இருந்து காணலாம் இறைப் பற்றுடையவர்களை பற்றிக் கூறும்போது” பாடுவார் பணிவார் பல்லாண்டிசைக்கூறு பக்தர்கள்” (20:10:3) என்று குறிப்பிடுகிறார். “பண்ணிசைச் சுவைகள் பாடியாடிடும் பக்தர்கென்றும்” (31:2:3) நிறையருள் வாய்க்கும் என்பது அப்பரின் அரியவாக்கு.

அப்பர் இசைப் பாடல்களை இயல்பாகப்பாடி இசையருளைப் போற்றி வியக்கும் தன்மையுள்ளவர். இசையால் இறைவனைப் புகழ்வதைக் கடமையாகக் கொண்டவர் இதனை அவருடைய பாடல் ஒன்று மிகச் சிறப்பாக விளக்கும். “சலம்பூவொடு தூபம் மறந்தறியேன். தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன்” (4:1:6) இறைவனின் புகழை இனிய தமிழிசைப் பாடல்களால் விளக்க மனமுருகப்பாடிப் பரவுகிறார்.

தமிழோடிசை பாடி வழிபடுவதை மற்ற வழிபாட்டு முறைக்கு ஈடு இணையாகக் கருதிக் கூறுகிறார் தமிழுக்கும் இசைக்கும் திருநாவுக்கரசர் கொடுத்துள்ள சிறப்பு இதனால் நன்கு விளங்கும்.

## சுந்தரர் பாடல்

சுந்தரருடைய பக்திப் பாடல்களை எடுத்து நோக்கும் பொழுது “ஆரூரன் பண்ணும் இசைக்கிளவி பத்திவை” (84:10) என்று குறிப்பிடுகிறார். “இன்னிசை” (68:9) என்பதையும் “இன்னிசை பாடல்” (81:2) என்பதையும் நன்கு சிறப்பித்துள்ளார். சம்பந்தருடைய சிறப்புக்களைச் சுந்தரர் எடுத்துக்கூறும்பொழுது” இன்னிசையால் தமிழ் பரப்பு ஞானசம்பந்தன்” (62:8) என்று குறிப்பிடுவதில் அவருடைய இசைப்பாடல்கள் இனிமையான இசை நிறைந்தவை என்பதை நயமாகச் சுட்டியுள்ளதைக் காணலாம். தமிழ் எவ்வாறு பங்காற்றுகிறது என்பதை “ஏழிசையின் தமிழால் இசைந்தேத்திய பத்தியையும்” (100:10)(2) என்று குறிப்பிடுகிறார். தமிழ்பற்றிய உணர்வும் தமிழிசை பற்றிய அறிவும் சுந்தரருக்கு இருந்துள்ளது. “தமிழோடிசை கேட்கும் இச்சை” (88:8) இருக்க வேண்டும் என்பதையும் கூறுகிறது “ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ்” (67:11) என்று சுந்தரரால் தமிழ் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

அக்கால மக்கள் தமிழ்ப்பண்களை நன்கு அறிந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். அனைவரும் கூடிப்பாடிட வேண்டும் என்ற கருத்தில் பலபாடல்களை மக்கள் இசைத்து ஈடுபடும் தன்மையில் இயற்றியுள்ளனர். மூவரும் இறைவனைப்பாடிப்பரவும் பாடல்களை வழிபாட்டிற்கு உதவும் முறையில் தமிழ்மொழியில் தமிழ் இசையமைப்புடன் பாடியுள்ளனர். பிறசமயங்களின் தாக்குதலிலிருந்து சைவம் தப்பித்தழைத்திருக்க வேண்டுமானால் மக்களின் பெருவாரியான ஆதரவு வேண்டும். அதற்குத்தக்கவாறு

 DOI: 10.34256/irjt21s219

ஆலய வழிபாட்டு முறைகள் அமைக்கப்படவேண்டும். மக்களின் மொழியில் அமையாத எதுவும் தழைக்கமுடியாது என்பதை நன்கு உணர்ந்த சமயக்குரவர்கள் மூவரும் மக்களின் மொழியினை தமிழில் பாடல்களை இயற்றி மக்களை இறைவழிபாட்டுடன் தமிழிசையையும் வளர்த்தனர். தமிழிசையமைப்பு, தமிழ்ப்பண்கள் ஆகியவற்றைக் கையாண்டுள்ளனர். சங்காலத்திலிருந்தே தமிழிசையமைப்பாக இருந்து ஏழிசை நாற்பெரும் பண்ணிலிருந்து வளர்ச்சியடைந்த தமிழ்ப்பண்கள் ஆகியவற்றைக் கைக்கொண்டு இறையுணர்வுப் பாடல்களை மூவரும் படைத்துள்ளனர்.

## முடிவுரை

சம்பந்தர் சைவ மெய்யறிவினை இசையால் வளர்த்தார் என்கிறார் சேக்கிழார். சைவ மெய்யறிவை தலை தூக்கிடச்செய்த சந்தத்தை முதன்மையான உத்தியாகக் கைக் கொண்டார் சம்பந்தர். “சந்தையால் சம்பந்தன் பாடியது” என்று அவரே பல பதிகங்களில் குறிப்பிடுகிறார் தூங்கிக் கொண்டிருப்பவனை தாளத்தோடு கூடிய இசை எழுப்பி உற்சாகம் ஊட்டிவரும் உற்சாகமான தாளத்தில் இசைவருமானால் எவரும் எழுந்து கூத்தாடுவர் தாழ்களால் எற்றித் தாளம் போடுவர்.

வேற்றுச்சமய மயக்கத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் தமிழரை உணர்வூட்டித் தட்டி எழுப்ப சந்த இசையே சரியான வழி என்று கண்டு அதைக் கையாண்டார் சம்பந்தர்;. இதை “நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்” என்ற அவரது உத்தியைக் கண்டுபிடித்து அவரது பதிகங்களில் அடியுரை உண்மையை உரைத்துப்பாடினார் சுந்தரர். அதுமட்டுமல்லாது சுந்தரர் தானும் அந்த உத்தியைக் கைக்கொண்டு ஏழிசையால் இசைப்பயனாம் தமிழ் நெறியைப் பரப்பினார்.

அப்பரும் தமிழிசைப் பதிகங்களை திருநேரிசையாக தாண்டகமாக வகுத்து இசைத்தமிழ் வழி தாம் கண்ட மெய்யறிவைப் பரப்பினார். அம் மூவர் தேவாரமும் இசைத்தமிழை தூக்கி நிறுத்தி பெரும்பணி செய்தன. இன்று பழந்தமிழிசையை மீட்டெடுக்க வேண்டுமென்றால் அதற்குரிய ஆற்றல்களை உள்ளடக்கிய களஞ்சியம் பன்னிரு திரு முறைகளே என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## References


Perumal A.N., (1984), Music of Tamil, International Institute of Tamil Studies, Chennai, India

Sundaram, V.P.K., (1994 &1997) Tamilisai Encyclopedia, Bharathidasan University publishing, Volume -2 &3, Trichy, India

Suresh, T., Tamilisai Aivu Malai, Thirunavukarasar Music research and education trust, Chennai, India


**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License